(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 111.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 ஒக்தோபர் 27, வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

490/ '16

1.

கௌரவ கனக ஹேரத்,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015-2016 ஆம் ஆண்டுகள் தொடர்பாக சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக கவனத்திற்கொள்ளப்பட்ட அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(ii) அந்த அளவுகோல்களுக்கு அமைவாக சமுர்த்தி நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என திருப்தி அடைகின்றாரா என்பதையும்;

(iii) நிவாரணம் கிடைக்க வேண்டியுள்ளபோதிலும் தற்போது நிவாரணம் கிடைக்காதுள்ள குடும்பங்கள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) இவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது எத்திகதியிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

532/ '16

2.

கௌரவ புத்திக பத்திரண,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பனை பாகு சார்ந்ததாக பல உற்பத்திகளை மேற்கொள்ள முடியுமென்பதையும்;

(ii) சீனிக்கு பதிலீடாக பயன்படுத்தக்கூடிய ஆரோக்கியம் மிகுந்த மாற்றீடாகும் என்பதையும்;

(iii) இந்த கைத்தொழில்துறை ஊடாக பெருமளவு தொழில்வாய்ப்புகளைத் தோற்றுவிக்க முடியுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பனைப் பாகு மற்றும் கருப்பட்டி சார்ந்த கைத்தொழில்களை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் எவ்வளவென்பதைப் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பனை பாகு மற்றும் கருப்பட்டி சார்ந்த கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

754/ ’16

3.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் நம்பிக்கை நிதியக் (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

782/ '16

4.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையில், இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நன்கொடைகளின் ரூபாய்களிலான பெறுமதி, ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) 2015ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டில் ஊகிக்கப்பட்ட வெளிநாட்டு நன்கொடைகளின் அளவு யாது;

(iii) 2015ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வெளிநாட்டு நன்கொடைகளின் அளவு யாது;

(iv) 2015ஆம் ஆண்டில் வெளிநாட்டு நன்கொடைகள் குறைவடைந்தமைக்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை;

(v) 2016 ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நன்கொடைகள் தொடர்பில் அனுகூலமானதும் சாதகமானதுமான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாரம்பரிய உள்நாட்டு கைத்தறி நெசவுக் கைத்தொழில் நிகழ்காலத்தில் பாரிய நெருக்கடி நிலைமைக்கு உள்ளாகி இருக்கின்றதென்பதையும்;

(ii) இந்த உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளதோடு தரமான உற்பத்தி களுக்காக உயர்மட்ட விலையைப் பெற்றுக்கொள்ள இயலுமென்பதையும்;

(iii) கம்பஹா மாவட்டத்தில் பாரியளவில் பரவியுள்ள இந்த கைத்தொழிலுக்காக கடந்த அரசாங்கம் திவுலபிட்டிய, மடம்பெல்ல பிரதேசத்தில் ஏறக்குறைய 300 பாரம்பரிய கைத்தொழிலாளர்களுக்கு இயந்திர சாதனங்களையும் அறிவையும் வழங்கியதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கம்பஹா மாவட்டத்தில்,

(i) குடிசைக் கைத்தொழிலாக இந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள்;

(ii) நெசவுக்கைத்தொழில் நிலையங்கள்;

(iii) வசதிகளை வழங்க உள்ள உத்தியோகத்தர்கள்;

எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே அ (iii) இல் குறிப்பிட்டுள்ள ஆட்களின் நிலைமை பற்றி கண்டறியப்பட்டுள்ளதா;

(ii) கைத்தொழிலில் தற்போது ஈடுபட்டுள்ளவர்கள் எவ்வளவு;

(iii) இவர்களின் மாதாந்த உற்பத்தி எவ்வளவு;

(iv) இவை யாருக்கு சந்தைப்படுத்தப்படுகின்றன;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) தட்டுப்பாடு நிலவுகின்ற மூலப்பொருட்களை வழங்க வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(ii) உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய அல்லது கொள்வனவாளர்களை தொடர்புபடுத்தும் வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iii) பயிற்சி செயலமர்வுகள் அல்லது சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றனவா;

(iv) ஆமெனில் இறுதியாக அத்தகையதொன்று நடத்தப்பட்ட திகதி யாது;

(v) கைத்தொழிலை விருத்திசெய்யும் வேலைத்திட்டம் யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

788/ ’16

6.

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன,— உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில், 11 பிரதேச செயலாளர் பிரிவுகளின், நிருவாக நடவடிக்கைகள் இதுவரை பழைய எல்லைகளின்படி நடைபெற்றுவந்ததுடன், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரத்தைக் கையளிக்கும் சட்டம் மற்றும் 1996.08.02 ஆம் திகதிய 935 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின்படி புதிய எல்லைகள் அடையாளமிடப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) இதன் மூலம், பதவி ஸ்ரீபுர பிரிவில், 31J சிங்ஹபுர, 31F பழைய மதவாச்சி மற்றும் 31M சமன்புர ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன என்பதையும்;

(iii) கோமரங்கடவல பிரிவில், 233C மயிலவெவ கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதியும், சேருவில பிரிவின் ஒரு சில பகுதிகளும் வேறு பிரிவுகளுக்குப் பிரிந்து செல்கின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பழைய நிருவாகப் பிரிவுகளுக்கமைய திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்த கிராம அலுவலர் பிரிவுகளும் கிராமங்களும் யாவை;

(ii) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் படி எல்லைகளை மீள அடையாளமிடுகையில் வேறு பிரிவுகளுக்குரித்தாயிருந்த கிராம அலுவலர் பிரிவுகள் / கிராமங்கள் யாவை;

(iii) தற்போது செயற்படும் எல்லை நிர்ணய குழுவின் தீர்மானத்தின்படி புதிதாக பிரிவு எல்லைகள் அடையாளமிடப்படுமா;

(iv) ஆமெனில், அதன் அடிப்படை யாது;

(v) இது தொடர்பில் ஒவ்வொரு பிரிவிலும் குடியிருப்போரினது இணக்கம் வினவப்படுமா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

790/ ‘16

7.

கௌரவ விதுற விக்கிரமநாயக்க,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ராஜகிரியவில் அமைந்துள்ள விக்டோரியா இல்லம் 14 வாட்டுகளை கொண்டுள்ளதோடு குணப்படுத்த முடியாத 153 ஊனமுற்றவர்கள் தங்கியுள்ளனரென்பதையும்;

(ii) மேற்படி இல்லத்தில் தங்கியுள்ளவர்களின் அனைத்து பணிகளுக்காக மற்றும் நீர், மின்சாரம், ஊழியர் சம்பளம் உட்பட நிர்வாக செலவுகளுக்காக அரசாங்கம் வருடாந்தம் சுமார் ரூபா 08 மில்லியன் தொகையை பெற்றுக் கொடுக்கின்றதென்பதையும்;

(iii) மேற்படி தொகை அப் பணிகளுக்கு போதுமானதல்ல என்பதையும்;

(iv) ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் போதியதாயில்லாமையினால் புதிதாக ஊழியர்களை ஆட்சேர்க்க முடியாதுள்ளதன் மூலம் பணியாட்டொகுதியினரும் போதுமான அளவில் இல்லையென்பதையும்;

(v) பணியாட்டொகுதியினருக்கு போதிய அளவு உத்தியோகபூர்வ விடுதி வசதிகள் இல்லாமை மற்றும் போதியளவு சம்பளம் கிடைக்காமையினால் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்களிடமிருந்து சிறந்த சேவையினை பெற்றுக்கொள்வது பிரச்சினையாக உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போதுள்ள ஊழியர்களிடமிருந்து ஆகக்கூடிய சேவையை பெற்றுக் கொள்வதற்காக அவர்களது சம்பளத்தை அதிகரிக்கவும் வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) புதிதாக ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

800/ '16

8.

கௌரவ சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளபோதிலும், அப்பிரிவுகளில் அமைந்துள்ள அநேகமான பாடசாலைகள் "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படாது புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேலே (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி பாடசாலைகளை புறக்கணிப்பதற்கான காரணங்கள் யாவை;

(ii) முல்லைத்தீவு கல்வி வலயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள பாடசாலைகளை "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித் திட்டத்தின் பிரமாணங்களுக்கமைய உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

533/ '16

9.

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கரும்புச் செய்கை செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பு எத்தனை ஏக்கர்கள் என்பதையும்;

(ii) 2010 முதல் 2015 வரையிலான காலத்தினுள் கரும்பு உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்குமேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சீனி உற்பத்திக்கு மேலதிகமாக கரும்பின் மூலம் மேற்கொள்ளப்படும் வேறு உற்பத்திகள் யாவையென்பதையும்;

(ii) இவ்வுற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு கிடைத்த வெளிநாட்டுச் செலாவணி எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கரும்புச் செய்கையை விஸ்தரிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

755/ ’16

10.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் சேமலாப நிதியக் (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

582/ ’16

11.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008.01.09 ஆம் திகதி முதல் 2008.04.09 ஆம் திகதி வரை நடைபெற்ற உணவு மற்றும் ஔடத பரிசோதகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான மூன்றுமாத கால பயிற்சிப் பாடநெறியில் பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர், முகவரி, மாகணங்கள், மற்றும் சேவை நிலையங்கள் யாவையென்பதையும்;

(iii) இப்பாடநெறியின் இறுதியில் எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட திகதிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) செய்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கான வெட்டுப்புள்ளிகள் யாதென்பதையும்;

(v) இவ்வெட்டுப்புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் இவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட திகதி, ஒவ்வொரு உத்தியோகத்தருக்குமேற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வவுனியா மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் நம்பிக்கை நிதியக் (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.1),— ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2017 இன் அலுவல்களுக்காக, 70(1) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள, “இருபத்தி ஆறு” எனும் சொற்களுக்குப் பதிலாக, “இருபத்தி ஐந்து” எனும் சொற்களை இடுவதன் மூலம் இக்கட்டளை தொழிற்படுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.2),— 2016, நவெம்பர் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 12 ஆம் திகதி சனிக்கிழமை, 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 16 ஆம் திகதி புதன்கிழமை, 17 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய நாட்கள் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல.1),— 70(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017)” ஐ பரிசீலிப்பதற்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2016 நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி, சனிக்கிழமை முதல் 17 ஆம் திகதி, வியாழக்கிழமை வரையிலான நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணி வரையும் இருக்குமாக. ஆயினும், பி.ப. 6.30 மணிக்கு 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் (5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— 70(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2016 நவெம்பர் மாதம் 11 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணிவரையும் மற்றும் பி.ப 1.30 மணி முதல் பி.ப 7.00 மணி வரையும் இருக்குமாக. ஆயினும், பி.ப. 6.30 மணிக்கு 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் (5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3),— 70(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2016 நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணிவரையும் மற்றும் பி.ப 1.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரையும் இருக்குமாக. ஆயினும், பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 4),— இப்பாராளுமன்றம், ஒக்தோபர் 28 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை அதன் அமர்வு கலையும் போது, 2016 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி, வியாழக்கிழமை பி.ப. 2.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) ஆம் உப பிரிவின் (ஔ), (க) மற்றும் ( த) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 12 ஆம் திகதிய 1892/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஏ) பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள், கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 03 ஆம் திகதிய 1904/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (த எ), (த ஏ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஔ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூலை 20 ஆம் திகதிய 1924/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 10) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல. 11 ) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு (2) ஆம் உப பிரிவின் (ஈ) மற்றும் (உ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் மாதம் 15 ஆம் திகதிய 1971/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.20ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 18.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

19.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.